بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 17/09/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்து நிகழ்வுகள் பற்றி கூறப்பட்டு வந்தது. இன்று அதில் யர்மூக் போர் பற்றி சிலவற்றைக் கூறுவேன். யர்மூக் போர் ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் அல்லது சிலரது பார்வையில் டமாஸ்கஸ் வெற்றிக்கு முன்னர் ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டில் நடைபெற்றது. ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முதன் முதலாக யர்மூக் போரில் வெற்றியின் நற்செய்தி கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வஃபாத் ஆகி 20 நாள்கள் கழிந்திருந்தன. ஆனால், சிலரது பார்வையிலோ முதன் முதலாக டமாஸ்கஸ் வெற்றியின் நற்செய்தி கிடைத்தது. சாட்சியங்கள் மூலம் இந்த விஷயமே அதிகம் சரியானதாகத் தெரிகிறது.

ரோமானியர்கள் டமாஸ்கஸ் மற்றும் ஹோம்ஸில் தோல்வியடைந்து எல்லைப்புற நகரமான 'அந்தாக்கியா' சென்றடைந்தார்கள். அங்கு ஹெராக்ளியஸ் சாதுரியமான மற்றும் கண்ணியத்திற்குரிய தனது அவையோரிடம், 'அரேபியர்கள் போர்த் தளவாடகங்களிலும் போர் ஆற்றலிலும் உங்களை விடக் குறைந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். இருப்பினும் எப்படி உங்கள் மீது ஆதிக்கம் பெறுகிறார்கள்?' என்று ஆலோசனை கேட்டான்.

ஆலோசகர்கள் அனைவரும் வெட்கத்தால் தலைகுனிந்து விட்டனர். ஆயினும், ஓர் அனுபவமிக்க முதியவர், 'அரேபியர்கள் நல்லொழுக்கத்தில் நம்மை விடச் சிறந்தவர்கள். அவர்கள் இரவில் இறைவணக்கம் செய்கின்றனர். பகலில் நோன்பு நோற்கின்றனர். யார் மீதும் அநீதியிழைப்பதில்லை. ஒருவர் மற்றவருடன் சரிசமமாகப் பழகுகிறார்கள். ஆனால், நமது நிலை எப்படி இருக்கிறது என்றால், நாம் மது அருந்துகின்றோம். தீய நடத்தைகளில் ஈடுபடுகின்றோம். வாக்குறுதிகளைப் பேணுவதில்லை. மற்றவர்கள் மீது அநீதியிழைக்கின்றோம். அதன் தாக்கம், அவர்களின் பணிகளிலோ உத்வேகமும் மன உறுதியும் காணப்படுகிறது. நமது பணியோ துணிவும் மனஉறுதியும் அற்றதாக இருக்கிறது' என்று கூறினார்.

ஸீஸர் சிரியாவை விட்டுப் புறப்பட எண்ணம் கொண்டு விட்டிருந்தான். ஆனால், கிருத்தவ முறையீட்டாளர்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவனிடம் முறையிட்டார்கள். அதனால் ஸீஸருக்கும் ரோஷம் வந்தது. அவன் தனது முழு அரச பலத்தையும் அரேபியர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி விட்டான்.

கான்ஸ்டண்டினோபில், ஆர்மீனியா தீவு முதலிய எல்லா இடங்களிலிருந்தும் ‘அந்தாக்கியா’ வுக்கு படைகள் திரண்டு வந்தன. இந்த ஆயத்தங்கள் பற்றி ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுக்குத் தெரியவந்த போது, அன்னார் மிகவும் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய சொற்பொழிவாற்றி, ஆலோசனை கேட்டார்கள். அபூசுஃப்யானின் மகன் யஸீது அவர்கள், ‘பெண்களையும் குழந்தைகளையும் நகரத்தில் விட்டுவிட்டு நாம் நகரத்துக்கு வெளியில் படை அமைத்து நிற்கலாம்’ என்று ஆலோசனை கூறினார்கள்.

இதைக் கேட்ட ஷுரஹ்பீல் பின் ஹஸனா அவர்கள், ‘நகர வாசிகளோ கிருத்தவர்கள்; இவ்வாறு அவர்கள் உள்ளிருந்தவாறு கிளர்ச்சி செய்து விடப் போகிறார்கள்’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், ‘கிருத்தவர்களை நகரத்தை விட்டு வெளியேற்றி விடலாம்’ என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஷுரஹ்பீல் அவர்கள், ‘இவ்வாறு வாக்குறுதி மீறுதல் ஆகிவிடும்’ என்று கூறினார்கள். அப்போது உடனடியாக ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் தமது தவறை உணர்ந்துவிட்டார்கள். கடைசியில், ‘டமாஸ்கஸ் சென்றடைய வேண்டும்; அங்கு காலித் (ரலி) அவர்களும் இருக்கிறார்கள்; அரேபியாவின் எல்லையும் அருகில் இருக்கிறது’ என்று முடிவானது.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் கட்டளையால் நகரவாசிகளின் பாதுகாப்பிற்காக வசூலிக்கப்பட்ட ஜிஸ்யா வரி அல்லது கப்பம் ஆகியவற்றின் இலட்சக்கணக்கான தொகை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இதனால் கிருத்தவர்கள் மீதும் யூதர்கள் மீதும் நல்ல தாக்கம் ஏற்பட்டது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹோம்ஸ் வாசிகளுடன் மட்டுமே இவ்வாறு நடந்து கொள்ளவில்லை. இன்னும் சொல்லப் போனால், எந்த அளவு மாவட்டங்கள் வெற்றி காணப்பட்டிருந்தனவோ, அந்த எல்லா இடங்களுக்கும், ‘வசூலான ஜிஸ்யா வரித் தொகை முழுவதையும் திருப்பிக் கொடுத்து விடுங்கள்’ என்று எழுதி அனுப்பினார்கள்.

முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டதாகவும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்தான், ‘உங்களால் பாதுகாப்பு வழங்கமுடியவில்லை என்றால், அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஜிஸ்யா வரி போன்றவற்றைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்’ என்று கூறியதாகவும் கூட ஆதாரங்கள் கிடைக்கின்றன.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் அனைத்து சூழ்நிலையையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதிய போது, ‘முஸ்லிம்கள் ரோமானியர்களுக்கு அஞ்சி ஹோம்ஸ் வந்துள்ளார்கள்’ என்பதைக் கேள்விப்பட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் கவலையடைந்தார்கள். அன்னார், ‘நான் ஸயீது பின் ஆமிரை உதவிக்காக அனுப்புகிறேன்’ என்று எழுதினார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் டமாஸ்கஸ் சென்றடைந்த உடனேயே ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களிடமிருந்து ‘ஜோர்டான்’ உடைய மாவட்டங்களில் கிளர்ச்சி செய்யப்படுவதாகத் தகவல் கிடைத்தது. ஆக, அடுத்த நாளே ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஜோர்டான் உடைய எல்லைப்பகுதியான யர்மூக் சென்றடைந்து விட்டார்கள். இங்கிருந்து பின்புறமாக அரேபியாவின் எல்லை அருகில் இருந்தது. மேலும், திறந்த மைதானமாக இருந்ததனால் போர்த் தேவைகளுக்கு ஏற்ப பின்னால் விலகிச் செல்வது

எளிமையாக இருந்தது. முஸ்லிம்கள் ரோமானியர்களின் போர் ஆயத்தங்கள் குறித்த செய்தியைக் கேள்விப்பட்டதும் பதற்றமடைந்து விட்டார்கள்.

இந்நிலையில் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் மீண்டும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எல்லா அன்ஸார் மற்றும் முஹாஜிர்களை ஒன்றுகூட்டி இந்தக் கடிதத்தை வாசித்துக் காட்டினார்கள். அப்போது, அனைத்து சஹாபாவும் அழுதுவிட்டார்கள். மேலும், 'அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் எங்களுக்கு அனுமதி தாருங்கள். நாங்கள் சென்று எங்கள் சகோதரர்களுக்காக அர்ப்பணம் ஆகிவிடுகிறோம்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு, அன்னார் தளபதியாகி சஹாபாவோடு புறப்படுமாறு ஆலோசனை வழங்கினார்கள். ஆனால், பிற சஹாபா இந்த ஆலோசனையில் கருத்து வேறுபாடு கொண்டார்கள். மேற்கொண்டு உதவிப்படைகள் அனுப்ப வேண்டும் என்று முடிவானது. அதுவரை எதிரி யர்மூகிலிருந்து 3,4 தங்குமிடங்கள் தொலைவிலேயே இருந்தான். உதவி சென்றடைவது அசாத்தியமாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரு கடிதத்தை எழுதினார்கள். அன்னார் தூதுவரிடம், 'நீங்களே ஒவ்வோர் அணிக்கும் சென்று இந்தக் கடிதத்தை வாசித்துக் காட்ட வேண்டும்; மேலும், உமர் உங்களுக்கு சலாம் கூறுகின்றார் என வாய்மொழியாகக் கூற வேண்டும்' என்று கூறினார்கள். (அந்தக் கடிதத்தில்) அன்னார் கூறுகிறார்கள்:

'முஸ்லிம்களே! அஞ்சாமல் சண்டையிடுங்கள். சிங்கங்களைப் போன்று உங்கள் எதிரிகள் மீது பாய்ந்து விடுங்கள். வாள்களால் அவர்களது தலைகளைக் கொய்து விடுங்கள். அவர்கள் உங்கள் பார்வையில் எறும்புகளை விட இழிவானவர்களாக இருக்கட்டும். அவர்களின் பெரும்பான்மை உங்களை அச்சமடையச் செய்து விட வேண்டாம். உங்களில் இதுவரை உங்களை வந்தடையாதவர்கள் காரணமாகக் கவலை அடைய வேண்டாம்.'

தூதுவர் கடிதத்தைக் கொண்டு சென்ற அன்றே தற்செயலாக, ஹஸ்ரத் ஸயீது பின் ஆமிர் அவர்களும் 1000 பேர் கொண்ட படையுடன் சென்றடைந்து விட்டார்கள். அதனால், முஸ்லிம்களுக்கு மிகவும் உறுதி ஏற்பட்டது. இருபடைகளும் அணிவகுத்தன. ரோமானியர்களிடம் இரண்டு இலட்சத்திற்கும் மேலான மக்கள் கூட்டம் கொண்ட 24 படைவரிசைகள் இருந்தன. அவர்களுக்கு முன்னால், மதத்தலைவர்கள் சிலுவைகளை ஏந்திக் கொண்டு எழுச்சியூட்டிக் கொண்டிருந்தார்கள். (இரு அணியிலிருந்தும் சிலர் முன் வந்து போரிடும்) ஆரம்பகட்ட மோதலுக்குப் பிறகு, முதல் நாள் ரோமானியர்கள் தோல்வியைத் தழுவினர். அடுத்த நாள் ரோமானியர்கள் முஸ்லிம்களுக்குப் பொன் பொருளுக்கான பேராசையூட்டுவதற்காக தமது தூதுவரை அனுப்பி சமரச பேச்சுவார்த்தை நடத்த விரும்பினார்கள்.

தூதுவர் சென்றடைந்த போது முஸ்லிம்கள் மஃக்ரிப் தொழுது கொண்டிருந்தார்கள். தூதுவர் முஸ்லிம்களின் மெய்மறந்த நிலை, பணிவு, உயர்தரம் மற்றும் தன்னடக்கத்தை வியப்புடனும் ஏற்றுக் கொள்ளும் கண்ணோட்டத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தார். தொழுகைக்குப் பிறகு அவர் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டார்.

உதாரணமாக, ஈஸா (அலை) தொடர்பாக உங்களின் கொள்கை என்ன? (என்று கேட்டார்).

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் சூரா ஆல இம்ரானின் 60 ஆவது வசனத்தையும் சூரா அந்நிஸாவின் 172 மற்றும் 173 ஆவது வசனங்களையும் ஓதினார்கள். அல்லாஹ் இந்த வசனங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பிறப்பை ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் பிறப்புடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளான். மேலும், வேதத்தை உடையவர்களுக்கு, மார்க்க விவகாரங்களில் வரம்பு மீறாதீர்கள் என்றும் மஸீஹ் - தான் அல்லாஹ்வின் அடியாராகக் கருதப்படுவதை ஒருபோதும் அற்பமாகக் கருதமாட்டார் என்றும் அறிவுறுத்திக் கூறியுள்ளான். இந்த வசனங்களைக் கேட்டு, அந்தத் தூதுவர், 'இவையே ஈஸா (அலை) அவர்களின் பண்புகளாகும்; உண்மையில், உங்களுடைய இறைத்தூதர் உண்மையானவர்' என்று கூறி முஸ்லிமாகிவிட்டார்.

அடுத்த நாள் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தூது சென்றார்கள். ரோமானியர்கள் தமது பகட்டு ஆரவாரத்தால் அவர்கள் மீது மதிப்பச்சத்தை ஏற்படுத்த விரும்பினர். ஆனால், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்கள் அனைவரையும் அவமதிப்புடன் பார்த்தவாறு முகந்திருப்பி விட்டார்கள். ரோமானியர்களின் தளபதி பாஹான் பொன் பொருளுக்கான பேராசையூட்டினான். அதை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அற்பமாகக் கருதி மறுத்துவிட்டார்கள்.

தூது சென்ற நிகழ்வுக்குப் பிறகு, ரோமானியர்கள் பிறகு ஒருபோதும் சுதாரித்துக் கொள்ள முடியாமற்போன அந்தக் கடைசி போருக்கான ஆயத்தங்கள் துவங்கின. அடுத்த நாள் ரோமானியர்கள் உத்வேகத்துடனும் போர்த்தளவாடங்களுடனும் போர் புரிய புறப்பட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும் அரபு நாட்டின் பொதுவான வழக்கத்திலிருந்து அகன்று புதுவகையில் படையை வரிசைப்படுத்தினார்கள். இவ்வாறு 30 - 35 ஆயிரம் பேர் கொண்ட படையை 36 பகுதிகளாகப் பிரித்து அதை மிகவும் திறமையுடனும் சிறப்பாகவும் அணியணியாக நிற்க வைத்தார்கள். சொற்பொழிவு ஆற்றுபவர்கள் படைக்கு உத்வேகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டி ஒரு புதிய உணர்ச்சிப் பெருக்கையும் பேரார்வத்தையும் உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

முஸ்லிம்களின் படையில் முழு அரேபியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் இருந்தார்கள். அவர்களில் 100 பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபா இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தைப் பார்த்த சான்றோர்கள் 1000 பேர் இருந்தார்கள். இந்தப் போரின் இன்னொரு தனிச்சிறப்பு என்னவென்றால், பெண்களும் இதில் கலந்து கொண்டு, மிகவும் வீரத்துடன் போர் புரிந்தார்கள். அவர்களில் ஒருவராகவே அபூ சுஃப்யானின் மனைவி ஹிந்தும் இருந்தார்கள். அவர்கள் மிகவும் வீரத்துடன் போரிட்டார்கள்.

ரோமானியர்களின் உத்வேகத்தின் நிலை எப்படி இருந்ததென்றால், உறுதியாக நிற்பதற்காக 30,000 பேர் கால்களில் இரும்புச் சங்கிலிகளைக் கட்டிக் கொண்டனர். ஆயிரக்கணக்கான பாதிரிகளும் பிஷப்களும் கைகளில் சிலுவையை ஏந்தியவாறு ஹஸ்ரத் ஈஸா வாழ்க! என்று முழங்கிக் கொண்டிருந்தனர். இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட பிரம்மாண்டமான படை முன்னேறியது. அது மிகவும் வலுவாகத் தாக்கியது. முஸ்லிம்கள் வெகுநேரம்

உறுதியாக நின்றார்கள். ஆனால், பிறகு முஸ்லிம்களின் படையின் வலப்புறப்பிரிவு அறுபட்டு விட்டது. பெண்கள் முஸ்லிம் போர்வீரர்கள் பின்வாங்கக் கண்ட போது அவர்களுக்கு எழுச்சியூட்டினார்கள். எல்லாப் புறமும் கைகளும் தோள்களும் வெட்டுண்டு விழுந்து கொண்டிருந்தன. அந்த அளவு போர் கடுமையாக நடந்தது. ஆனால், போர்வீரர்களின் உறுதித்தன்மை ஆட்டங் காணவில்லை.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் திடீரென்று படை வரிசைகளைக் கிழித்துக் கொண்டு முன்னேறினார்கள். மேலும், எவ்வளவு வலுவாகத் தாக்கினார்கள் என்றால், ரோமானியர்களின் படைகளைப் புரட்டிப் போட்டு விட்டார்கள். அவர்களைத் தோற்கடித்தவாறு படைத்தளபதி தரஞ்சார் வரைச் சென்றடைந்து விட்டார்கள். அபூ ஜஹ்லின் மகன் இக்ரிமா அவர்கள் கிருத்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள். மேலும், 400 பேரிடமிருந்து மரணிப்பதற்கு (த் தயாராக இருப்பதாக) பைஅத் பெற்று முன்னேறினார்கள். கிட்டத்தட்ட அனைவருமே அங்கேயே வெட்டுப்பட்டு விட்டார்கள். ஆனால், எதிரிகளின் ஆயிரக்கணக்கான மக்களை அழித்துவிட்டுச் சென்றார்கள்.

சரியாக அதே சமயத்தில் ரோமானிய படையின் வலப்புறப் பிரிவின் தலைவனான இப்னு கனாத்தீர் என்பவன் (இஸ்லாமிய) படையின் இடப்புறப் பிரிவின் மீது தாக்குதல் தொடுத்தான். இடப்புறப் பிரிவில் பெரும்பான்மையான போர்வீரர்கள் 'லஹ்ம் மற்றும் குஸ்ஸான்' கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் நெடுங்காலமாக ரோமானியர்களுக்கு வரி செலுத்திவந்தார்கள். இவ்வாறு இயற்கையாகவே ரோமானியர்களைக் கண்டு அச்சமடைந்திருந்தனர். அவர்களால் இந்தத் தாக்குதலை சமாளிக்க முடியவில்லை. அவர்கள் பின்வாங்கி விட்டார்கள். பின்னால் இருந்த இஸ்லாமிய பெண்கள் முன்னேறி, மிகவும் மனஉறுதியுடன் கிருத்தவர்களை முன்னேற விடாமல் தடுத்து விட்டார்கள். படையின் நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருந்தது.

ஆனால், படைத்தலைவர்களின் வீரம் பார்க்கத் தகுந்ததாக இருந்தது. போரில் அதுவரை ரோமானியர்களின் கை ஓங்கியிருந்தது. அப்போது படையின் இடப்புறப் பிரிவின் பின்புறம் நியமிக்கப்பட்டிருந்த கைஸ் பின் ஹுபைரா அவர்கள் திடீரென்று பின்புறமிருந்து தாக்கினார்கள். இந்தத் தாக்குதல் எவ்வளவு கடினமானதாக இருந்ததென்றால், ரோமானியர்களால் சுதாரிக்க முடியாமல் போனது. அவர்களின் படைகள் அனைத்தும் சிதறுண்டு போயின. அத்துடன் ஸயீது பின் ஸைது அவர்கள் படையின் மையப்பகுதியிலிருந்து வந்து தாக்கினார்கள். ரோமானியர்கள் வெகுதூரம் வரை (பின்பக்கமாக) விலகிக் கொண்டே சென்றனர். எதுவரை என்றால், போர்க்களத்தின் மறுமுனையில் இருந்த வடிகாலின் ஓரம் வரைச் சென்று விட்டனர். சிறிது நேரத்தில் அவர்களின் சடலங்கள் அந்த வடிகாலை நிரப்பிவிட்டன. போர்க்களம் காலியாகி விட்டது.

ஆக, அல்லாஹ் இந்த முக்கியமான போரில், முஸ்லிம்களுக்கு மாபெரும் வெற்றியின் மூலம் தனது நெருக்கத்தை வழங்கினான். இந்தப் போரில் நடந்த இந்தவொரு நிகழ்வு நினைவிற் கொள்ளத்தக்கதாகும். அதாவது, மும்முரமான போர் நடந்து கொண்டிருந்த போது ஒரு முஸ்லிம் போர் வீரர் குப்பாஸ் பின் கைஸ் அவர்கள் எந்த அளவு துணிவுடன் போரிட்டார்கள் என்றால், அவர்கள் கால் வெட்டுண்டு போனது; ஆனால், அது அவர்களுக்குத் தெரியவேயில்லை.

இந்தப் போரில் ரோமானியர்களின் **70,000** அல்லது ஒரு இலட்சம் போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம்கள் தரப்பில் **3000** உயிரிழப்புகள் ஏற்பட்டன. ஸீஸருக்குத் தோல்வியைப் பற்றிய செய்தி அந்தாக்கியாவில் கிடைத்தபோது, அவன் அப்பொழுதே கான்ஸ்டண்டிநோபில் -க்குச் சென்றுவிட்டான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வெற்றியின் நற்செய்தி கிடைத்ததும், அக்கணமே ஸஜ்தாவில் விழுந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்தப் போர் விவரங்களை எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு வரலாறு குறித்து நல்ல ஆழமான அறிவு இருந்தது. அன்னார் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டே வரித் தொகையை கிருத்தவ நகரவாசிகளுக்குத் திருப்பிக் கொடுத்ததாகக் கருதினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் அவர்கள் உடனிருந்த பன்னிரண்டு நபர்களும் செய்த தியாக நிகழ்வை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

போருக்குப் பிறகு தண்ணீர் அருந்தக் கொடுக்கும் நபர் அவர்களை அடைந்த போது, ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் காயமடைந்திருந்த அடுத்த நபரைக் காட்டி, 'முதலில் அவருக்குத் தண்ணீர் அருந்தக் கொடுங்கள். அவர் என்னை விட அதிகம் தேவையுடையவர்' என்று கூறினார்கள். அவர் காயுமுற்ற அந்த நபரிடம் சென்ற போது, அவர் காயமடைந்திருந்த அடுத்த நபரைக் கைகாட்டி, 'அவர் என்னை விட அதிகம் தேவையுடையவர். முதலில் அவருக்குத் தண்ணீர் அருந்தக் கொடுங்கள்.' என்று கூறினார்.

இவ்வாறு அவர் எந்தப் போர் வீரரிடம் சென்றாலும் அவர் அந்த (தண்ணீர் அருந்தக் கொடுத்த) நபரை மற்றவரிடம் அனுப்பிவிடுவார். யாரும் தண்ணீர் அருந்தமாட்டார்கள். அந்த நபர், காயமடைந்திருந்த கடைசி நபரிடம் சென்ற போது அவர் மரணித்துவிட்டிருந்தார். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களை நோக்கி வந்த போது அவர்களும் இறுதி மூச்சை சுவாசித்து முடித்திருந்தார்கள். மற்ற காயமுற்றவர்களின் நிலைமையும் இவ்வாறே ஆனது. அந்த நபர் யாரிடம் சென்றாலும் அவர் மரணித்து விட்டிருந்தார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில், 'இந்தக் குறிப்பு தற்போது தொடர்கிறது. இன் ஷா அல்லாஹ்! இனிவருங்காலங்களிலும் எடுத்துரைக்கப்படும்' என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمکم اللّٰه اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**